தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

### வேல்ஸ் பல்கலைக்கழகத்தில்

# உயர்கல்வியை தொடர 3 ஆயிரம் பேருக்கு கல்வி உதவித்தொகை

## கல்விக்குழுமத்தின் நிறுவனர் ஐசரி கணேஷ் தகவல்

சென்னை, ஜூலை.30–

வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை தொடர 3 ஆயிரம் பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட இருப்பதாக வேல்ஸ் குழும கல்வி நிறுவனங்களின் நிறுவனர் ஐசரி கணேஷ் தெரிவித்துள்ளார்.

### வேல்ஸ் கல்வி உதவித் தொகை

உயர்கல்வியை தொடருவதில் நிதி இல்லாத மாணவர்களுக்கு உதவிடும்வகையில் கல்வி உதவித்தொகைவழங்கப் படுகிறது. குறிப்பாக இந்த ஆண்டு கொரோனா தொற்றால் பலரின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் அந்த பாதிப்பில் இருந்து மாணவர்கள் விடுபட்டு, கல்வியை தொடருவதற்கு ஆதரவுக்கரம் நீட்டவேண்டும் என்ற அடிப்படையில் வேல்ஸ் கல்வி உதவித்தொகை திட்டம் கொண்டுவரப்பட்டது.

அதன்படி, இந்த உதவித் தொகை பெறுவதற்கான 'வி–சாட்' தேர்வு கடந்த 1–ந்தேதி ஆன்லைன் வழியாக நடத்தப்பட்டது. இந்த தேர்வை தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதினார்கள். இதில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று இருக்கின்றனர்.

### உயர்கல்வியை தொடர ஒரு வாய்ப்பு

இந்த தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்ற மாணவர்கள் 100, 75, 50, 25, 10 சதவீதம் என 5 பிரிவுகளின் கீழ் கல்வி உதவித்தொகை பெறுவார்கள். கல்வி உதவித் தொகை பெற தேர்வு எழுதிய மாணவர்கள் தேர்வு முடிவுகளை http://www.velsuniv.ac.in/VSAT.asp என்ற இணையதளத்தில் சென்று பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

இதுகுறித்து வேல்ஸ் குழும கல்வி நிறுவனங்களின் நிறுவனர் ஐசரி கணேஷ் கூறுகையில், 'வேல்ஸ் உதவித்தொகை தேர்வு மூலம் தகுதியுள்ள மாணவர்களை அடையாளம் காண முடிந்தது. இதன் மூலம் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற இருக்கிறார்கள். அவர்கள் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை தொடருவதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்' என்றார்.

### காட்டுநாயக்கன் வகுப்பின மக்களை

# பழங்குடி இனத்தவர் பட்டியலில் சேர்க்கவேண்டும்

## எச்.வசந்தகுமார் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.30–

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் எச்.வசந்தகுமார் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

காட்டுநாயக்கன் என்று சொல்கின்ற பழங்குடியின மக்கள் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி பகுதிகளில் அதிகமாக வசிக்கிறார்கள். காட்டுநாயக்கன் வகுப்பின குழந்தைகள் பள்ளிக்கல்வி முடித்து வெளிவரும் போது சாதி சான்றிதழ் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம் அரசு பட்டியலில் காட்டுநாயக்கன் வகுப்பினர் இடம்பெறவில்லை. முதல்– அமைச்சர், இந்த காட்டுநாயக்கன் வகுப்பின மக்களை பழங்குடி இனத்தவர் பட்டியலில் சேர்த்து அக்குழந்தைகளின் உயர்கல்வி தொடர வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.